8th September 1970]

3. The Tamil Nadu Additional Assessment and Additional Water Cess (Amendment) Bill, 1970. (L.A. Bill No. 17 of 1970).

4. The Tamil Nadu Electricity Duty (Validation) Bill, 1970. (L.A. Bill No. 19 of 1970).

5. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 21 of 1970).

6. The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1970 (L.A. Bill No. 22 of 1970).

7. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970).

I have further received a message from the Hon. Speaker, Tamil Nadu Legislative Assembly transmitting a copy of the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation) Bill, 1970 (L.A. Bill No. 20 of 1970) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

(3) *Decision of the Business Advisory Committee*

DEPUTY CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. to-day, it has been decided that the Council may meet on the 9th at 4 p.m. and adjourn *sine die* after considering the Government Bills that may be passed and transmitted by the Assembly.

III. ADJOURNMENT MOTION *Re* INCIDENTS AT MANAMADURAI DURING ELECTION OF VICE-CHAIRMAN OF PANCHAYAT UNION.

DEPUTY CHAIRMAN : I have received notice of a motion from Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the incidents which happened at Manamadurai on the 31st August, 1970 during the election of the Vice-Chairman of the local Panchayat Union and the high-handed action of the Panchayat Union President and the harassment let loose by the Police on the subsequent days in the villages of the said Panchayat Union, which is continuing and the great hardship caused to the public and the panic prevailing in the Panchayat Union area.

I want to know from the hon. the Leader of the Opposition how the matter falls within the scope of the rules governing adjournment motions.

8th September 1970]

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த வருந்தத்தக்க சம்பவத்தைப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கு மிகவும் வருந்துகிறேன். ஏனெனில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகப் பொறுப்புகள் கொடுக்க வேண்டும். அவைகள் திறம்பட நடக்க வேண்டுமென்பதற்காக என்னுடைய அரசியல் வாழ்வில் பெரும் பகுதியைச் செலவிட்டவன் நான். அந்த நிலைமையில் கடந்த 14,15 ஆண்டுகளாகத் தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருந்து பாடுபட்டு வந்திருக்கிறேன். அண்மையில் நடந்த பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் பெரும்பாலான விஷயங்களில் ஒன்றும் அதிகமாகக் குற்றம் சொல்வதற்கில்லை. ஒரு சில இடங்களில் நடந்ததைப்பற்றி அன்றும் பேசினேன். இன்றும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மானமதுரையில் பஞ்சாயத்து யூனியன் உப தலைவரைத் தேர்ந்தெடுக்க யூனியன் தலைவர் சட்டப்படி கொடுக்க வேண்டிய நோட்டீசைக் கொடுத்திருந்தார். 31-ம் தேதி யூனியன் உதவித் தலைவர் தேர்தல் நடப்பதற்கு இப்போதிருக்கும் தலைவருக்கு விரோதமான கட்சியைச் சேர்ந்தவர்கள்—எந்த ஒரு அரசியல் கட்சி என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை — 18,19 பேர்கள் கூடியிருந்திருக்கிறார்கள். யூனியன் தலைவர் உள்ளே வராமல் வெளியிலேயே இருந்துவிட்டார். அவரோடு பெரிய கூட்டம் வெளியே இருந்து இந்தக் கூட்டம் நடக்காமல் இருப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து, கற்களைப் போட்டு யூனியன் கட்டிடத்தின் கதவுகளையே உடைத்து விட்டார்கள். அப்படியிருந்தும் போலீசார் அமைதியைப் பாதுகாத்து மீட்டிங் நடத்துவதற்கு உதவி செய்திருக்கிறார்கள். யூனியன் தலைவர் உள்ளே வரவில்லை. தலைவர் வராமல் கமிஷனர் வர மறுத்துவிட்டார். ஆகவே ஒரு தலைவரைப்போட்டு யூனியன் உபதலைவர் தேர்தலை நடத்தியிருக்கிறார்கள். இதற்குள் வெளியே இருந்த யூனியன் தலைவர் – ஒரு பாராளுமன்ற மெம்பர் — அவர் தலைமையில்கூடி, கூச்சல் போட்டு, கலவரங்களை நடத்த ஆரம்பித்து விட்டார்கள். போலீசார் தடுத்து, அதில் போலீஸ் போட வேண்டுமென்று கேட்டு மதுரைக்கு தந்தி போயிருக்கிறது. மதுரையிலிருந்து போலீஸ் படை 5 மணிக்கு வந்தது. நகரத்திற்குள் சென்று பல வீடுகளையும் அந்த 19 பேரை இருக்க வைத்து சாப்பாடு போட்டவர்களையும் போய்த் தாக்கியிருக்கிறார்கள். அந்த வீட்டிற்கு முன்னால் தான் ஒரு கொலையும் நடந்தது. அது பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டு பர்லாங் தூரம் இருக்கும். இதற்குப் பின்னால் போலீசார் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து, போலீஸ் வானிலிலேயே இந்தப் பத்தொன்பது பேர்களை ஏற்றிக்கொண்டு போய், போலீஸ் ஸ்டேஷனில் தஞ்சம் புக வைத்திருக்கிறார்கள். இவ்வளவு நடந்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தாக்கியது போலவும் பிறகு கொண்டு வந்தது போலவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. பத்திரிகையில் இந்த விதமாக செய்தியைத் திருத்திச் சொல்லி, மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தைத் தூண்டிவிட ஏற்பாடு செய்துவிட்டார்கள். இந்த நிலைமை வரைக்கும் போலீசார் நன்றாகவும் பாரபட்சமற்ற நிலைமையிலும் நடந்திருக்கிறார்கள். இப்படி இருக்க, திடீரென்று மதுரையிலிருந்து போலீஸ் சூப்பிரெண்டெண்டை முதலமைச்சர் அனுப்பியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அவர் அனுப்பினாரா என்பது தெரியாது. ஹோம் செக்ரடரி அல்லது யார் அனுப்பினாரோ தெரியாது.

[திரு. கே. ராஜாராம்] [8th September 1970

மதுரை ஜில்லா சூப்பிரெண்டெண்டு அங்கே போய் ''இன்வெஸ்டிகேஷன்'' ஆரம்பித்து 19 பேர்களில் மூன்றுநான்குபேர்களை ''அரெஸ்ட்'' செய்து உள்ளே வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கும் பப்ளிக் பிராசிகியூடர் போதாது என்று மதுரையிலிருந்தும் பப்ளிக் பிராசிகியூடர் போயிருக்கிறார். இவர்களெல்லாம் போய் கேஸ் ஜோடனை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். தினமும் பல கிராமங்களுக்குச் சென்று 10, 20 பேரை அழைத்து வந்து அவர்களை மிரட்டியிருக்கிறார்கள். அடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மாலையில் வீட்டிற்குப் போகச் சொல்வது, மறு நாள் இன்னொரு ஊரிலிருந்து ஆட்களை அழைத்து வருவது. இம்மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. நேற்று நான் ஜில்லாக் கலெக்டரைச் சந்தித்தேன். அவரோடு பேசியதில் இனிமேல் நடவாமல் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். இது திருப்தி கொடுக்கிறது. இன்று காலை வந்த டெலிபோன் செய்தி : இன்னும் கிராம ஜனங்களைக் கொண்டுவந்து மிரட்டுகிறார்கள், போலீசார் மக்களுக்கு பீதி உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். உண்மைக்கு மாறாகப் பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் தலைவர் அந்தக் கூட்டத்திற்கு வந்தது போலவும் அவருடைய காரை மறித்தது போலவும் பத்திரிகையில் வந்தது. அதுவும் இல்லை. மதுரையிலிருந்து பஞ்சாயத்து யூனியன் தலைவரைச் சேர்ந்தவர்கள் டாக்சியில் வந்திருக்கிறார்கள். அந்த டாக்சி எம்.டி.யு. 7767 மதுரையிலிருந்து ஒண்ணுவது மைலிலேயே மரத்தில் போய் இடித்து டாக்சி நொறுங்கியிருக்கிறது. அதில் காயம் பட்ட பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 3, 4 அங்கத்தினர்கள் மதுரையிலே ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இப்படியிருக்க அரசாங்கத்திடமும் முதலமைச்சரிடமும் வந்த செய்தி வேறு. அவர்கள் காரில் வந்ததாகவும் மாற்றுக் கட்சிக்காரர்கள் அவர்களை வழி மறித்துத் தாக்கியதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த ''ஆக்சிடெண்டு'' நடந்த இடத்தைப் பார்த்தால், தெரியும். மரத்தில் சொட்டை ஏற்பட்டிருக்கிறது. தென்னை மரத்தில் காயம் ஏற்பட்டிருக்கிறது. நான் சென்று நேரில் பார்த்தேன். பத்திரிகையில் வந்த செய்தியில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் மதுரை பப்ளிக் பிராசிகியூட்டரை அனுப்பியதும் மதுரை சூப்பிரண்டெண்டை அனுப்பியதும் எவ்வளவு தூரம் நியாயம் என்று முதலமைச்சர் யோசிக்க வேண்டும். இப்படி அனுப்புவது சரியா என்று பார்க்க வேண்டும். பார்லிமெண்ட் அங்கத்தினர் நிற்கிறார் என்பதற்காக இவ்வளவு தூரம் கெடுபிடிகள் செய்வது நியாயமா என்று யோசிக்க வேண்டும். இது அன்றாட சம்பவம் அல்ல. திடீரென்று ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் இது ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குத் தகுதியான விஷயமாகும். இந்தத் தகவல் செப்டம்பர் 1-ம் தேதி சட்ட சபை ஒத்தி வைக்கும் வரை தெரியாது. அதன் பின் தெரிந்ததால்தான், இன்று கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது அண்மையில் நடந்த விஷயம். ஆகையினால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு சபை அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விரிவாக விவாதிக்க வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : I want to know the view-point of the Government in the matter.

8th September 1970]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இது வருந்தத்தக்க சம்பவம் என்று குறிப்பிட்டார்கள். இந்த சம்பவத்தைப் பற்றி மதுரையிலே என்னை நிருபர்கள் கேட்ட நேரத்திலும், அரசியல் மாச்சரியங்களைக் கொலை வெறிகளால் தீர்த்துக் கொள்வது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்க முறையல்ல, இப்படிப்பட்ட காரியங்களில் எந்தக் கட்சிக்காரர்கள் ஈடுபட்டாலும், அது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய ஒன்றாகும் என்ற கருத்தினைத் தான் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறந்த வழக்கறிஞரும் கூட. ஆகவே அவர்கள் இந்த மன்றத்தில் இந்த வழக்கை எப்படி எடுத்து வைக்க வேண்டுமோ அந்த வகையில் எடுத்து வைத்திருக்கிறார் என்று தான் நான் கருதுகிறேன். இந்த வழக்கில் விரிவாக நிகழ்ந்ததைப் பற்றி நான் எடுத்துச் சொல்வது தொடரப்பட்டிருக்கின்ற வழக்கினுடைய அம்சங்களைப் பாதிக்கக்கூடும் என்று நான் நிச்சயமாக அஞ்சுகிறேன். ஆகவே அந்தக் குற்றத்தை நான் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் இந்த மன்றத்தில் முதலமைச்சர் என்ற முறையில் அப்படித்தான் நடந்தது, இப்படித்தான் நடந்தது என்று நான் எடுத்துக்கூறுவது அவ்வளவு முறையாகாது என்று கருதுகிறேன். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிருஷ்ணன், எம்.பி. அவர்களுடைய கார் சேதமடைந்ததை அப்படியே விட்டுவிட்டு, ஏதோ மதுரையிலிருந்து வந்த டாக்சி மரத்தில் மோதியதைத் தான் பார்த்ததாகச் சொல்லி, வேறு எந்தக் காரும் வழி மறிக்கப்படவில்லை என்று சொன்னார். வழி 5-10 p.m.
மறித்ததாகச் சொல்லப்படும் கார் சிவகங்கையிலிருந்து வந்த காராகும். சிவகங்கையிலிருந்து வந்த கார், குறுக்கே ஒரு பஸ் நிறுத்தப்பட்டு வழி மறிக்கப்பட்டது; அந்த பஸ்ஸிலே இருந்தவர்கள் கீழே இறங்கி புதருக் கடியில் ஒளிந்திருந்தார்கள். நிறுத்தப்பட்ட காரிலிருந்து வாக்களிக்க வேண்டிய உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர்கள், தாக்கப்பட்டார்கள். அல்லது இழுத்துச் செல்லப்பட்டார்கள். பின்னால் வந்த கார் முன்னால் வந்த கார் மறிக்கப்பட்டதை உணர்ந்ததும், அவர்கள் பின்னுக்குத் திரும்பிச் செல்வதற்காகத் திரும்பிய சமயத்தில் அங்கே இருந்த ஒரு பள்ளத்தில் வீழ்ந்தது. அந்தக் காரும் வழி மறித்தவர்களிடத்தில் சிக்கிக் கொண்டது. அதிலிருந்தவர்கள் கடத்திச் செல்லப்பட்டார்கள் என்கின்றது இந்தச் செய்திகள். அதிலிருந்த கிருஷ்ணன், எம். பி., அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர், யூனியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அவர்தான் உதவித் தலைவர் தேர்தலை நடத்தி வைக்க வேண்டியவர். அந்த வகையில் அவர் அந்தத் தேர்தலை நடத்தி வைப்பதற்காக உள்ளே சென்ற நேரத்தில் துப்பாக்கி கொண்டு மிரட்டப்பட்ட காரணத்தினால், அவர் வெளியே வந்து விட்டார் என்று தான் தகவல் வந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவர் வெளியே இருந்தார் என்பதை ஒப்புக்கொண்டார்கள். தேர்தல் நடக்கிற நேரத்தில் ஏன் யூனியன் தலைவர் வெளியே இருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உள்ளே துப்பாக்கி மிரட்டல் இருந்த காரணத்தினாலேதான், அவர் வெளியே ஓடி வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பச்சைப் படுகொலை நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் 4, 5 நடைபெற்றிருக்கின்றன. அப்படிக் கொலை செய்யப்பட்டவர், கிருஷ்ணன், எம்.பி. அவர்களுடைய சித்தப்பா ஆவார்கள். நான் கன்னியா

[திரு. மு. கருணாநிதி] [8th September 1970

குமரியில் விவேகானந்தர் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சிக்காகச் செல்லும்போது மதுரையிலே இறங்கினேன். கன்னியா குமரிக்கு வருகின்ற குடியரசுத் தலைவரவர்களை வரவேற்கவும், பாது காப்பு அளிக்கவும், ஐ.ஜி. அவர்கள் போக வேண்டிய மரபு, முறை இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் என்னோடு வர நேர்ந்தது. அவர் விமான நிலையத்திற்கு வந்த பிறகுதான், அவர் என்னோடு வருகிறார் என்பதை நான் தெரிந்துகொண்டேன். மதுரை விமான நிலையத்தில் நான் இறங்கியபோது, சித்தப்பாவைப் பறிகொடுத்த நண்பர் கிருஷ் ணன் அவர்கள் தான் அங்கே நடந்த செய்திகளை என்னிடத்தில் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களே, முதல் நாள் அந்த சம்பவங்கள் நடந்த நேரத்தில் போலீசார் எப்படி உதவி யாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். மதுரை எஸ்.பி. அவர் கள், மறுபடியும் அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடைபெறவொட் டாமல் தடுப்பதற்கும், நிலைமைகளைக் கட்டுப்படுத்திச் செயல்படுவதற் கும்தான் அங்கே சென்றார்கள். அங்கே நிலைமைகள் கட்டுங்கடங்காமல் கிராமங்களில் வீடுகளிலே நுழைவார்களேயானால், பிறகு போலீசாருக்கு களங்கம் ஏற்படலாம், அரசுக்கும் இழுக்கு ஏற்படலாம். ஏதாவது ஒன்றிரண்டு போலீஸ்காரர்கள் தவறான காரியங்களில் ஈடுபட்டு அத னாலும் களங்கம் ஏற்படலாம். ஆகவே அப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படக் கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மதுரை எஸ். பி. அவர்கள் அங்கே அனுப்பப் பட்டார்களே ஒழிய, அவர் அங்கே சென்று புலன் விசாரணையில் ஈடுபட வில்லை. அவர் அங்கே போதிய பாதுகாப்பிற்காகச் சென்றார். அதைப் போலவே திருச்சியிலிருந்து ஒரு போலீஸ் படை அங்கே அனுப்பப் பட்டது. அவர்கள் அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் மறுபடியும் ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதற்காக அனுப்பப்பட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்களும், அங்கே இருந்த போலீசார் தங்கள் கடமைகளை சரிவரச் செய்தார்கள், உதவியாக இருந்தார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கடமைகளைச் செய்வதற்காக மதுரை மாவட்டத்தி லிருந்து எஸ்.பி. அவர்கள் அனுப்பப்பட்டவர்களேயல்லாமல், புலன் விசாரணையில் ஈடுபடுவதற்காக அல்ல. அங்கே இருக்கின்ற எஸ்.பி. மீது நம்பிக்கையற்ற தன்மையிலே வேறு எஸ்.பி.யை அனுப்பி புலன் விசாரணை செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அந்த நிலைமையில் இதை நான் மிக விரிவாக எடுத்துப் பேச விரும்பவில்லை. பத்திரிகையில் வந்த செய்திகளையும், அமைச்சர்களுக்குக் கொடுக்கப் படுகிற தகவல்களையும் வைத்து முடிவு செய்ய வேண்டியதில்லை. அதைப் போலவே எதிர்க் கட்சித் தலைவரவர்களும் அவர்களைச் சார்ந்த பத்தி ரிகைச் செய்திகளையும், அவர்களுக்குக் கிடைக்கின்ற தகவல்களையும் வைத்து முடிவு செய்யாமல், அதை நீதிமன்றத்திற்கே விட்டு விடுவோம் என்று கூறி, இந்த ஒத்தி வைப்பு தேவையில்லை என்றுகூறிஅமைகிறேன்.

DEPUTY CHAIRMAN : Now I have heard both sides. Though the subject-matter of the motion is a specific matter of recent occurrence, the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law. Further, the Leader of the Opposition has got ample opportunity to raise the matter during the discussion on the Tamil Nadu Appropriation Bill, 1970, today. Therefore, I withhold consent to the raising of the matter.